

Vol.27 | No. 5 | May 2023
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## PRIESTLY ORDINATION



12.04.2023 @ Lalam Puthenpally



15.04.2023 @ Nithiravilai





13.4.2023 @ Thovarayar

Fr. George Kandathil
FR. Ajin C.
Fr. Joseph Cherippanattu



BASIC THEOLOGICAL COURSE, II$^{ND}$ BATCH,
AWARD FUNCTION, PADANTHALUMOODU, 16.04.2023



SMYM, FORANE MEET, SOOSAIPURAM,
23.04.2023



MATHAR JOTHIS, BIBLE IN WRITING, LENTEN INITIATIVE

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 27 No :05 MAY 2023



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Mr. Edwinson**

**Mr. Iyathurai**

**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

DTP & Design

**M.R.Merin Sujith**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் திருமுகம் | 08 |
| மறைக்கல்வி | 13 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 15 |
| இல்வாழ்வு இயக்கம் | 21 |
| வின்சென்ட் தே பவுல் சங்கம் | 22 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 23 |
| அருட்சகோதர்களிடமிருந்து | 25 |
| தென்காசி மறைபரப்புதள செய்திகள் | 26 |
| நலவாழ்வு பணிக்குழு | 27 |
| தக்கலை இளையோர் கல்வி பணியகம் | 29 |
| மறைமாவட்ட செய்திகள் | 30 |
| மறைவட்ட செய்திகள் | 34 |
| MONTHLY AGENDA - MAY 2023 | 40 |
| BISHOP'S ENGAGEMENTS | 43 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/145/2023**

**30 April 2023**

**Dear Readers,**

Greetings and prayerful wishes Bishop's House, Thuckalay!

We are in the season of Easter. Jesus' resurrection is a prelude to our resurrection. In 1 Corinthians 15:20, we read: "But now Christ is risen from the dead, and has become the first fruits of those who have fallen asleep." As such, the teachings of the Pauline Epistles are also centred around, first of all, the core truth of the resurrection of Jesus Christ, and then on the message that this resurrection also brings us our own resurrection. We need to keep up the fervour of Easter as we prepare for the celebrations of Ascension and Pentecost. During these days, let us prepare our people for an outpouring of the Holy Spirit as our Blessed Mother and the Apostles received so that our faith in the risen Lord may be strengthened and may become apostles of the risen Lord!

As we are entering the month of May, let us briefly reflect upon the role that our Blessed Mother plays in the lives of our faithful. During this month let us re-emphasise the importance of praying the rosary in every Catholic house. In the month of October we pray the rosary in groups but during this month let us concentrate on praying for the rosary as members of families. I encourage everyone to help our people to rediscover the beauty of praying the rosary at home during this month.

We need to keep in mind that our priestly ministry is closely tied to our Blessed Mother's maternal intervention. We entrust ourselves to her, the humble servant, in whom the Lord has done great things, so that we may become witnesses to the boundless love of Jesus Christ during this month of May. In our mission, Mother Mary comes to our aid even as we walk with our people to lead them to the risen Lord, and so discover in him and his Gospel the deepest

meaning of their existence and thus grow into new persons. For this reason, we make her known and loved as the one who believed, who helped, and who instilled hope.

Mother Mary lived her yes to the full. She, therefore, becomes our concrete and sublime model. She makes us understand that nothing is impossible for God. She makes us appreciate the fact that it is the humility of the heart that attracts God's kindness. When the angel informed her of her cousin Elizabeth's pregnancy and that God had done great things to her cousin, she went in haste to the hill country of Judea to be by her side and praise God for His marvel. As Mary is our model in contemplation, she also becomes our model in action. With her help, we can understand and proclaim our God's providential design, be proactive on our feet, and go out in haste to help the needy.

Mary faced her life's journey with great realism, humanity, and practicality. Three words sum up Mary's attitude: listening, decision, and action. They are words that point out a way for us as we face what the Lord asks of us in life. Listening, decision-making, and action.

Listening: What gave rise to Mary's act of going to visit her relative Elizabeth? A word from God's angel about Elizabeth, namely, "In her old age, she has conceived a son" (Lk 1:36). Mary knew how to listen to God. It was not merely hearing but listening. It requires deep attention, serene acceptance, and total availability to God. It was not in the distracted way with which we sometimes face the Lord or others: we hear their words, but we do not listen. Mary was attentive to God. She listened to God.

However, Mary also listened to the events, that is, she interpreted the events of her life. She was attentive to reality itself and did not stop on the surface but went to the depths to grasp its meaning. Her kinswoman Elizabeth, who was already elderly, was expecting a child. This was the event. But Mary was attentive to the meaning. She understood it: "With God, nothing will be impossible" (Lk 1:37). This is also true in our lives: listening to God, who speaks to us, and listening to daily reality, paying attention to people and events. Because the Lord is at the door of our lives and knocks in many ways, he puts signs on our path and gives us the ability to see

them. Mary is the mother of listening, of attentive listening to God and of equally attentive listening to the events of life.

Decision-making: Mary's life was one of contemplation and decision, not breathlessness or restlessness. As St Luke emphasises, "She kept all these things, pondering them in her heart" (Lk 2:19, 51). Moreover, at the crucial moment of the angel's Annunciation, she also asks, "How shall this be?" (Lk 1:34). Yet she does not stop at the moment of reflection either. She goes a step further: she decides. She does not live in haste but goes with haste only when necessary. Mary does not let herself be dragged along by events; she does not avoid the effort of taking a decision. And this happens both in the fundamental decision that was to change her life: "I am the handmaid of the Lord; let it be done according to your word" (Lk 1:38) and in her daily decisions, which are routine but also full of meaning.

The episode of the wedding of Cana might come to mind (Jn 2:1–11): Here too, one sees the realism, humanity, and practicality of Mary, who is attentive to events and problems. Mother Mary sees and understands the difficulty of the young married couple at whose wedding feast the wine runs out; she thinks about it, knows that Jesus can do something, and decides to address her Son so that he may intervene: They have no more wine (Jn 2:3). Jesus protested that his "hour has not yet come." The hour of Jesus includes his passion, death, resurrection, and exaltation as one great event. Despite Jesus' detachment from the problem, Mary instructed the waiters, "Do whatever he tells you," showing faith that her son would do what was needed to save the honour of the newlyweds and their families. The Church uses the account of this miracle to remind us that, by her position as the Mother of God and our heavenly mother, Mary's intercession for us with God has great power. She decides and she intercedes.

It is difficult in life to make decisions. We often tend to put them off, to let others decide instead, we frequently prefer to let ourselves be dragged along by events, to follow the crowd and the current fashion; at times we know what we ought to do, but we do not dare to do it, or it seems to us too difficult because it means swimming against the tide. In the Annunciation, in the Visitation, and at the

wedding of Cana, Mary goes against the tide. She listens to God, reflects and seeks to understand reality, and she decides to entrust herself totally to God. Although she is with her child, she decides to visit her elderly relative; again, later, she decides to entrust herself to her son with insistence to preserve the joy of the wedding feast.

Action: Mary set out on a journey and went with haste (Lk 1:39). Despite the difficulties and the criticism she would have met with because of her decision to go, nothing could stop her. And here she leaves with haste. In prayer, before God who speaks, in thinking and meditating on the facts of her life, Mary is not in a hurry, she does not let herself be swept away by the moment; she does not let herself be dragged along by events. However, when she has clearly understood what God is asking of her and what she has to do, she does not loiter, she does not delay; she goes with haste. St Ambrose commented: “There is nothing slow about the Holy Spirit.” Mary’s action was a consequence of her obedience to Angel’s words but was combined with charity: she went to Elizabeth to make herself useful, and in going out of her home, of herself, for love, she takes with her the most precious thing she has: Jesus. She takes her son.

In contrast, we sometimes stop listening and thinking about what we must do; we may even be clear about the decision we have to make, but we do not move on to action. And above all, we do not put ourselves at stake by moving towards others with haste to bring them our help, our understanding, our love; to bring them, like Mary, the most precious thing we have received, Jesus and his Gospel, with words and above all with the tangible witness of what we do. May Mary, our Blessed Mother, make us men and women of action.

In the history of the Church, Christians have experienced the protection of the Virgin Mary at various times of necessity. Perhaps today, at this time in history, we need the protection of our Mother, not just for Christians but for the whole of humanity. The title Help of Christians is an indication of the special intervention of Mary in the most difficult trials of our personal lives, of the Church, and of the whole human family. We need her protection and consolation. We need her intervention in this critical period of human history. It is fitting that we take Mary, our help into our confidence. We need to bring her into our lives.

Besides the ever-changing political and global situation, we need to be more concerned about other things. In an age of rationalism and secularism, even an age of spiritual consumerism and pragmatism, when many Catholics are abandoning devotions in the name of superstitions, here comes the month of May with its devotion to the Immaculate Help of Christians. In times like the present, which are not easy, Mary guides and protects. We need to firmly convince ourselves that Mary is by our side and that she guides and inspires our lives.

During this month of May, we need to teach our people to "invite Jesus and Mary to remain with them in their homes." St John Mary Vianney suggests this as the solution for many of the problems that families face. He used to encourage parents to create an atmosphere of prayer, Bible reading, mutual love and respect, and sacrificial service at home so that the presence of Jesus and Mary might be perpetually enhanced and experienced in the family.

During this month of May, let us contemplate the virtues of Mother Mary and inculcate various forms of devotion to her among our people. Let us make it a grace-filled time to receive the showers of blessings from our heavenly mother. Just like the blooming lilies that beautify our gardens and refresh the air with their sweet fragrance, may the presence of our blessed Mother beautify our parish communities, removing every element of evil and spreading the fragrance of her maternal love, peace, serenity, and harmony. Our Blessed Lord wants the heart of every priest to be the home of Mother Mary, where she is the mother, guide, and helper. Let us give her a rightful place and honour her with profound love and devotion, especially on her feast day on 31 May.

Before I conclude my reflection, I want to thank you, dear Fathers, for the successful ministries that you carry out in the parishes and institutions. The faithful in our parishes have grown spiritually through your fatherly intervention. The students in our educational settings have learned much during the justconcluded year. As we eagerly wait for the results of the public examinations, let us prepare with greater enthusiasm for the coming academic year. I also remind you of the forthcoming VPV programme, which will be held in all our parishes. We need to encourage and prepare our children so that

they can learn much about our Catholic Faith during these days of intensive catechesis. Our young candidates for the priesthood, who are now on holiday from their respective seminaries, are in various parishes our diocese helping the fathers to organise VPV classes. Let's continue to pray and promote priestly and religious vocations. Kindly send possible candidates to the Vocation Camps at our minor seminary. This year the Catechism department is organising two days of retreat for our catechism teachers on 26 and 27 May, at Sinai Retreat Centre. Kindly inform the teachers and make sure that all the teachers from your parish attend this spiritual exercise before we begin the Catechism Academic year on 28 May, 2023. Let us make all these events momentous and beneficial for our Eparchy through our collaborative teamwork.

As stated in my reflection at the beginning of this circular, the month of May is a singular period for us to pay homage to our Blessed Mother Mary. She has played a unique role in salvation history. As the Mother of God, she was conceived without sin. By her own free will, she agreed to bring the "Word made flesh" (John 1:14), our Lord and Saviour Jesus Christ, into the world. Mary is foreshadowed as the one who would crush the head of the serpent in Genesis 3:15 through her divine Son. Still, she in no way overshadows him, nor would she ever wish to! Her life, as we surmise from the gospels, was one of service and great devotion to Jesus. From the cave in Bethlehem where she gave birth to him to Calvary in Jerusalem, where she stood by his cross in his crucifixion, she followed him as a worthy disciple. Let us join the entire Catholic world in offering special honour to Our Blessed Mother during this month of May. Let us also encourage our people to come closer to our Blessed Mother by inculcating various Marian devotions, especially the praying of the holy rosary!

With my prayers and blessings,
Yours in Christ Jesus,
☦ George Rajendran SDB

Bishop of Thuckalay

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/43/2023**

## ஆயர் சுற்றுமடல்

***ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!***

அனைவருக்கும் உயிர்ப்புப் பெருவிழாவின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உயிர்த்த இயேசுவின் ஆற்றல் உங்கள் உள்ளங்களில் குடிகொள்வதாக. சில முக்கியமான விஷயங்களை உங்களோடுப் பகிர்ந்து கொள்வதற்காக இச்சுற்றுமடலை எழுதுகிறேன்.

**2023 இறையழைத்தல் வாரம்**

ஈசோ மெசியாவில் அன்பிற்குரியவர்களே,

“தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்” என யோவான் நற்செய்தி மூன்றாம் அதிகாரம் 16 ஆம் இறைவார்த்தைக் கூறுகிறது. தம் ஒரே மகனின் மனிதராதல் வழியாக உலகை மீட்ட கடவுள், மகனின் பணியைத் தொடர சீடர்களை அழைத்தார். “என் பின்னே வாருங்கள்;; நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்” (மாற் 1:17) என்னும் ஈசோவின் அழைப்பை ஏற்று சீடர்கள் அவரைப் பின்பற்றினர். இன்றும் கடவுளின் அழைப்புக்குச் செவிமடுத்து தங்கள் வாழ்வை அர்ப்பணித்த ஏராளமான குருக்களும் ஆண் மற்றும் பெண் துறவத்தாரும் உலகில் நாற்றிசைகளிலும் இறைப்பணி செய்து வருகின்றனர். ஆயனில்லா ஆடுகளைப் போன்று அலைக்கழிக்கப்பட்ட மக்களைக் கண்டபோது பரிவு கொண்ட ஈசோ, இன்று நம்மையும் அழைக்கிறார்.

இவ்வழைப்பை ஏற்கும் பொருட்டு, இறையழைத்தலின் விதைகளை பிள்ளைகளின் மனங்களில் விதைக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்கள்,

ஆசிரியர்கள், ஞானப்பெற்றோர்கள், பெரியவர்கள் என அனைவருக்கும் உண்டு. குடும்ப செபம், முறையாக மறைக்கல்வியை போதித்தல், கடவுளுக்கு உகந்த வாழ்க்கை நடத்துதல் போன்றவற்றின் வழியாக இறையழைத்தலின் விதைகளைப் பிள்ளைகளின் மனங்களில் விதைக்கலாம்.

இறையழைத்தலை ஊக்குவிக்க செபம் அவசியம். “அறுவடை மிகுதி; வேலையாள்களோ குறைவு. ஆகையால் தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்” (மத் 9:37-38) என்பது ஈசோவின் வேண்டுகோளாக இருக்கிறது. இவ் இறைவார்த்தைகள் நம்முடைய மறைமாவட்டத்திற்கு மிகவும் பொருந்தும். குமரி முதல் மதுரை வரை 9 மாவட்டங்களிலாக விரிந்துக் கிடக்கும் நமது தக்கலை மறைமாவட்டத்தில் பணிச் செய்ய ஏராளமானவர்கள் தேவை. இவற்றைக் கருத்தில் கொண்டு நமது மறைமாவட்டத்தில், இவ்வாண்டு ஏப்ரல் 16 தொடங்கி 30 ஆம் தேதி வரை இறையழைத்தல் நாட்களாக அனுசரிக்கப்படுகிறது. இந்நாட்களில் இழையழைத்தலுக்காக செபிப்போம். மேலும் இறையழத்தலைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஊக்குவிக்கவும் சிறப்பு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். சிறப்பு நிகழ்வுகளுக்கான நெறிமுறைகள், மறைமாவட்ட இறையழைத்தல் ஊக்குவிப்பாளர் அருள்தந்தை வழியாக உங்களிடம் ஏற்கனவே தரப்பட்டுள்ளன.

குருத்துவ வாழ்விற்கான அழைத்தலை ஏற்க விரும்பும் ஆண்பிள்ளைகளுக்காக இறையழைத்தல் முகாம், முக்கூட்டுக்கல் புனித மரியா இளங்குருமடத்தில் வைத்து, மே மாதம், 16 ஆம் தேதி மாலை 5 மணிமுதல் 18 ஆம் தேதி மாலை 4 மணி வரை நடத்தப்படுகிறது. 10, 12 மற்றும் கல்லூரி முடித்தவர்கள் இதில் பங்குப் பெறலாம். மேலும் ஒரு சிறப்பு முகாமானது 8, 9 மற்றும் 11 ஆம் வகுப்பு முடித்த ஆண்பிள்ளைகளுக்காக, மே 23 ஆம் தேதி மாலை 5 மணி தொடங்கி 24 ஆம் தேதி மாலை 4 மணிவரை நடத்தப்படுகிறது. இம்முகாங்களில் பங்கேற்க உங்கள் பங்குகளிலிருந்து பிள்ளைகளை அனுப்பி வைக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**விசுவாசப் பயிற்சி விழா – விபிவி 2023**

இளம்வயதில் குழந்தைகளின் மனதில் ஆழமான நம்பிக்கையை ஊன்ற வேண்டியது குடும்பம் மற்றும் பங்குச் சமூகத்தின் கடமையாகும். ஞாயிற்றுக் கிழமைகளில் மறைக்கல்வி பயிற்றுவித்து வருகிறோம். விசுவாசப் பயிற்சி விழா, அதை முழுவீச்சுடன் தீவிரமாக முன்னெடுப்பதற்கான நாட்களாக இருக்கின்றன. இதற்கென இவ்வாண்டு, ஏப்ரல் 30 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி வரையிலான நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்நாட்களில்,

குறைந்தது ஆறு நாட்களாவது பங்குகளில் 'விபிவி' நடத்த வேண்டும் என்று அறிவுறுத்துகிறேன். இம்முயற்சியில் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள் மற்றும் பங்குச்சமூகத்தின் முழு ஒத்தழைப்பும் இருக்க வேண்டும் என்பதைக் கனிவுடன் நினைவுப்படுத்திக் கொள்கிறேன்.

**'விண்பாதையில்' – செப மற்றும் பாடல் நூல்**

அன்பானவர்களே, இறைவழிப்பாட்டில் இறைக்களின் பங்கேற்பைப் பற்றிப் பேசும் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம், திருவழிபாடுகள் வழியாக குறிப்பாகத் திருப்பலி வழியாக அருளானது நிரூற்றிலிருந்துப் புறப்படுவதுபோல நம்மை நோக்கி வழிந்தோடி வருகிறது எனக் கூறுகிறது. மேலும், அவ்வருளை மிகுதியாகப் பெற்றுக் கொள்வதற்காக, இறைமக்கள் சரியான மனநிலையுடன் அவற்றை அணுக வேண்டும் என்றும் கூறுகிறது. "அவர்கள் உரைக்கும் சொற்களோடு உள்ளமும் இணைந்திருக்க வேண்டும். கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட அருள் வீணாகா வண்ணம் அவரோடு இணைந்து உழைக்க வேண்டும்" (திருவழிபாடு, எண் 11) என்றும் அறிவுறுத்துகிறது. இதைக் கருத்தில் கொண்டு பொதுநிலையினர் மற்றும் அருட்தந்தையரின் பெரும் முயற்சியின் பயனாக, நம் மறைமாவட்ட மக்கள் இறைவழிபாடுகளில் முழுமையாகப் பங்கேற்கும் நோக்குடன் 'விண்பாதையில்' என்னும் நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் வழிபாடுகளில் பயன்படுத்த வேண்டிய செபங்களும் பாடல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இருப்பிரிவுகளைக் கொண்ட இந்நூலின் முதல் பாதியில், பல்வேறுச் செபங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. புனிதர்களின் நவநாட்கள், செபமாலை, சிலுவைப்பாதை, ஆராதனை, வீடு சந்திப்பு மற்றும் இதர சந்தர்ப்பங்களுக்கான செபங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பிற்பாதியில் 850 பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. திருப்பலியில் பயன்படுத்த வேண்டிய வருகைப்பாடல், திருவிருந்துப் பாடல், நன்றிப்பாடல், பொதுப்பாடல், மாதாப் பாடல், ஆராதனைப் பாடல், புனிதர்களின் பாடல் என தனித்தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலின் இருப்பிரதிகளாவது ஒவ்வொரு குடும்பங்களிலும் இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். இவை குடும்ப செபம், உறவிய செபம், செபக் கூட்டம், வீடு சந்திப்பு எனப் பல்வேறு வேளைகளில் பயன்படுத்தப் பேருதவியாக இருக்கும். நம்முடைய ஆன்மீக வாழ்விற்கு அவசியமாக இருக்கும் திருவிவிலியத்தைப் போன்று இதுவும் இருக்கட்டும். ஆலயத்திற்கு வரும் போது இந்நூலை எடுத்து வரும் பழக்கத்தை அனைவரும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பழக்கம் மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் இளையோரிடமிருந்து தொடங்கட்டும்.

நூலில் இடம்பெற்றுள்ளப் பாடல்களை பாடற்குழுவுடன் இணைந்து இறைமக்களும் பாடும் பொருட்டுத் தேவையானப் பயிற்சிகளைப் பங்கு மக்களுக்குக் கொடுக்க வேண்டும். இதற்கான முயற்சிகளை மறைமாவட்ட

பாடற்குழு மேற்கொள்ளும். சிறப்புப் பயிற்சிகளும் இருக்கும். இந்நூலில் இடம்பெற்றிருக்கும் செபங்கள் திருத்தி அமைக்கப்பட்ட புதிய தமிழில் அமைந்துள்ளது. இச்செபங்களை இனிமேல் மறைமாவட்டத்தில் பயன்படுத்த வேண்டும். தனிப்பட்டப் பயன்பாட்டிற்காகப் பங்குகளில் அச்சிடப்பட்ட குறுநூல்களை இனிப் பயன்படுத்த வேண்டாம் என இதன் வழியாக அறிவுறுத்தப்படுகிறது. அப்படிப் பயன்படுத்த வேண்டும் எனில், அது மறைமாவட்ட ஆயரின் ஒப்புதலுடனே செய்ய வேண்டும். 'விண்பாதையில்' நூல் 2023 ஏப்ரல் 30 ஆம் தேதி முதல் வழக்கத்திற்கு வருகிறது.

**சீனாய் இறையியல் நிறுவனம்**

பொதுநிலையினரும் அருட்சகோதரிகளும் விசுவாச இறையுண்மைகளைப் பற்றிய ஆழமான அறிவையும் தெளிவையும் பெறும் பொருட்டு, நம்முடைய மறைமாவட்டத்தில் சீனாய் இறையியல் நிறுவனம் செயல்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். இவ்வாய்ப்பை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

குமரி மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்குத் தரமான உயர் கல்விக் கொடுப்பதில் நமது அல்போன்சா கலை மற்றும் அறிவியில் கல்லூரி தனி முத்திரைப் பதித்திருக்கிறது. இக்கல்லூரி முக்கியமாக நமது மறைமாவட்ட மக்கள் பயன்படும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகையால், பள்ளிக் கல்வியை முடித்த மாணவர்கள் இதில் சேர்ந்து படிக்க வேண்டும் என அறிவுறுத்துகிறேன். அறிவியல் மற்றும் கலை சார்ந்த அனைத்துத் துறைகளும் இங்கு இயங்குகின்றன. ஏழ்மையில் இருப்போருக்குச் சிறப்பு சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. இதரத் தகவல்களை நீங்கள் பங்குத் தந்தை மற்றும் அருட்தந்தை ஆண்டனி ஜோஸ் ஆகியோரிடமிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**புதுப்பிக்கப்பட்டத் திருப்பலி நூல்**

புதுப்பிக்கப்பட்ட சீரோ மலபார் திருப்பலி நூல் மலையாள மொழியில் வெளிவந்து ஓராண்டுக்கு மேல் ஆயிற்று. அது தமிழாக்கம் செய்யப்பட்டு, பிரதியைத் திருத்தும் பணிகள் நடைபெறுகிறது. திருத்தப்பட்ட நூல் நமது மறைமாவட்டத்தில் இவ்வாண்டு பெந்தக்கோஸ்தே திருநாளன்று நடைமுறைக்கு வரும்.

**பேராயர் மார் ஜோசப் பவ்வத்தில் நினைவேந்தல் திருப்பலி மற்றும் கூட்டம்**

நம்முடைய முன்னாள் பேராயர் மார் ஜோசப் பவ்வத்தில் அவர்கள், மார்ச் 18, 2023 அன்று இறைவனடி சேர்ந்தார்கள் என்னும் செய்தியை நீங்கள்

அறிவீர்கள். குமரி மிஷன் தொடங்கி 1996 ஆம் ஆண்டுவரை சங்னனாச்சேரி உயர் மறைமாவட்டத்தின் பகுதியாக இருந்து வந்தது. அக்காலத்தில், அவர் நம்மை சந்திப்பதற்காகவும், அருளடையாளங்கள் நிறைவேற்றுவதற்காகவும் நிகழ்வுகளில் பங்கேற்பதற்காவும் பலமுறை வந்திருக்கிறார். அவர், இங்குப் பணியாற்றிக் கொண்டிருந்த அருள்தந்தையர்களையும் அருட்சகோதரிகளையும் சந்தித்து, அவர்களுக்குத் தேவையான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி ஊக்குவித்தும் வந்தார். அன்னாரின் அயராத முயற்சியால்தான் 1996 ஆம் ஆண்டு குமரி மிஷன் தக்கலை மறைமாவட்டம் என்னும் நிலைக்கு உயர்த்தப்பட்டது. நம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்திருக்கும் பேராயரின் நினைவைக் கொண்டாடவும் அவருக்காக செபிக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். வருகின்ற மேய் மாதம், 04 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் வைத்து நினைவேந்தல் கூட்டமும் தொடர்ந்து 5.30 மணிக்கு திருப்பலியும் நடைபெறும். சங்னனாசேரி உயர் மறைமாவட்ட பேராயர் மார் ஜோசப் பெருந்தோட்டம் அவர்கள் இந்நிகழ்வுகளில் பங்கேற்க இசைந்திருக்கிறார். அந்நிகழ்வில் ஒவ்வொரு பங்கிலிருந்தும் ஐந்து நபர்கள் வீதம் பங்கேற்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறேன்.

அன்பான மக்களே, மேல் குறிப்பிட்ட நிகழ்வுகளையும் விஷயங்களையும் மனதில் கொண்டு அவை கடவுளுக்கு உகந்தவையாகவும் இறைமக்களுக்குப் பயன்மிக்கதாகவும் விளங்குவதற்காக இறைவனிடம் வேண்டுங்கள். அத்துடன் மறைமாவட்ட பணிகளுக்காகவும் எனக்காகவும் இறைவனிடம் வேண்டுங்கள். விடுமுறை நாட்களில் பிள்ளைகளின் மீது தனிக்கவனம் செலுத்துங்கள். அவர்களை நம்பிக்கையில் ஆழப்படுத்துங்கள்; ஆளுமையை வளர்த்தும் செயல்களில் ஈடுபடுத்துங்கள்; இறையழத்தலின் விதைகளை மனங்களில் ஊன்றுங்கள். உங்கள் குடும்பங்களில் இறையாசி தங்கவும், உங்கள் குடும்பங்களிலிருந்து இறையழைத்தல்கள் உருவாகவும், நீங்கள் மகிழ்ந்து வாழவும் இறைவனை வேண்டுகிறேன். இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

**ஆயர் இல்லம்**
**12.04.2023**

**என்றும் ஈசோ மெசியாவில்**

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB

**தக்கலை மறைமாவட்ட ஆயர்**




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

***அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்பண்டு. [உரோ 10:17]***

**அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!**

**அடிப்படை பயிற்சி வகுப்பிற்கான சான்றிதழ் வழங்கும் விழா**

மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்பு (2nd Batch) முடித்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா 2023 ஏப்ரல் 16 ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 2.00 மணிக்கு படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் ஆயர் மார். ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து ஆயர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மறைக்கல்வி வளர்ச்சிப்பணிகளில் உள்ள தடைகள், பிரச்சினைகள், சவால்கள், நம்பிக்கையின் பயிற்சியாளர்களாக திருச்சபையில் கடமையுணர்வு உள்ளவர்களாக இருக்கின்றோமா என்பது பற்றி பகுப்பாய்வு நடைபெற்றது. தொடர்ந்து அடிப்படை பயிற்சி வகுப்பு முடித்த ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. இறுதியில் மறைக்கல்வி ஆசிரியை திருமதி சீமா அவர்களின் நன்றியுரையுடன் விழாவானது இனிதே நிறைவுபெற்றது.

**2 -ஆம்- பருவத்தேர்வு**

10, 11, 12 பயிலும் மறைக்கல்வி மாணவர்களுக்கான 2- ஆம் பருவத்தேர்வு 2023 ஏப்ரல் 23 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை அந்தந்த மறைவட்டங்களில் வைத்து, மறைவட்ட இயக்குநர்களின் தலைமையில் நடைபெற்றது.

**ஆசிரியர்களுக்கான விசுவாச பயிற்சி விழா வகுப்புகள் :-**

விசுவாச பயிற்சி விழா எல்லா பங்குகளிலும் மிகச்சிறப்பாக நடத்தும் நோக்குடன் ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் 2023 ம் ஆண்டுக்கான VPV பயிற்சி வகுப்புகள் ஏப்ரல் 29, சனிக்கிழமை, கல்லுவிளை, ஆசீர் அரங்கில் நடைபெற்றது. காலை 9.00 மணிக்கு பெயர் பதிவு நடைபெற்றது. தொடர்ந்து 9.30 மணி அளவில் இறைவணக்கப் பாடலுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. மறைமாவட்ட

இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் வரவேற்று உரை நிகழ்த்தினார். சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி VPV பயிற்சி விழாவை தொடங்கி வைத்தனர். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து அருட்தந்தை றோபின் ஜோஸ் அவர்கள் இந்த வருட VPV பயிற்சி விழாவின் முக்கியத்துவத்தைப்பற்றி எடுத்துக் கூறி 'இயேசுவைப் பின்பற்றுவோம்' என்னும் இவ்வாண்டைய இலக்கு வாக்கை அறிமுகப்படுத்தினார். இறுதியில் ஊக்குவிப்பாளர். திரு. பிரைட் அவர்களின் நன்றியுரையுடன் தொடக்கவிழாவானது இனிதே முடிவுற்றது. ஊக்குவிப்பாளர் திரு. சோனிக் ரீகன் அவர்கள் விழா நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

பின்னர் 10.00 மணிமுதல் குழித்துறை மறைமாவட்ட குழுவினரால் ஆடல் பாடல் பயிற்சிகளும் நடத்தப்பட்டது. மதிய உணவுக்கு பின் பிற்பகல் 1.30



மணி முதல் சப்ஜூனியர், ஜூனியர், சீனியர், சூப்பர் சீனியர், ஆகிய நான்கு பிரிவுகளுக்கும் தனித்தனியே அருட்தந்தையர்கள் றோபின் ஜோஸ், அஜின் ஜோஸ், அருட்சகோதரி. ரீஜா ஆகியோர் வகுப்புகளை நடத்தினார்கள். இந்த பயிற்சி வகுப்புகளில் 260 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**போட்டித்தேர்வு (Scholarship Exam)**

3 முதல் 9 ம் வகுப்பு வரை பயிலும் மறைக்கல்வி மாணவர்களுக்கான போட்டித்தேர்வு, ஏப்ரல் 30 ஞாயிற்றுக்கிழமை படந்தாலுமூடு திரு இருதய மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை நடைபெற்றது. பங்களவில் நடைபெற்ற தேர்வில் 70% மேல் மதிப்பெண் பெற்ற 170 மாணவர்கள் இத்தேர்வில் பங்குபெற்றனர்.

***அருட்தந்தை. ஜேக்கப் ஐயம்மாத்ற — இணை இயக்குநர்***

***அருட்தந்தை.அபிலாஷ் சேவியர் — இயக்குநர்***



## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### நடுவண் செயற்குழு கூட்டம்

தக்கலை மறை மாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் நடுவண் செயற்குழு கூட்டமானது 2023 ஏப்ரல் 1 சனிக்கிழமை மதியம் 2 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் செபம் செய்தார். தொடர்ந்து வரவிருக்கின்ற தியானம் குறித்து விவாதிக்கப்பட்டது.

- இதில் மறைவட்ட முதன்மை பங்குதந்தை மற்றும் மறைவட்ட இயக்குனர் தந்தையர்களை நேரடியாக சந்தித்து தியானத்திற்கு தேவையான இளையோர்களை அழைத்து வரச் செய்ய வேண்டும்.
- அருள் சகோதரிகளை தனித்தனியாக சந்தித்து அவர்களுடைய பங்களிப்பை பெற உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து இளையோர்களிடத்தில் செய்தியை கொண்டு சேர்த்து பெரிய அளவு பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும்
- தியானத்திற்கான முன்பதிவு தொடங்கப்பட்டு அனைவரையும் பதிவு செய்ய வழிவகை செய்ய வேண்டும்.

இயக்குநர் தந்தையின் இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவு பெற்றது.

### தவக்கால அரைநாள் தியானம்

மஞ்சாலுமூடு மறைவட்ட இளையோருக்கான ஆன்மீக வளமாக்கல் நிகழ்வு மாலைக்கோடு திருச்சிலுவை ஆலய வளாகத்தில் 2023 ஏப்ரல் 4 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட SMYM தலைவர் மெர்பின் அவர்கள் இந்நிகழ்வை வழிநடத்தினார் தவக்காலத்தில் இயேசுவுடன் இணைந்து தனிப்பட்ட முறையில் ஜெபிக்கும் விதமாக இந்த நிகழ்வுகள் அமைக்கப்பட்டிருந்தது. மஞ்சாலுமூடு மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை ரோபின் ஜோஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இறுதியில் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

### தன்னார்வலர்களுக்கான திசையமைவு பயிற்சி

தக்கலை மறை மாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் இளையோர் தியானத்திற்காக தன்னார்வலர்களுக்கான திசையமைவு பயிற்சி 2023 ஏப்ரல் 22 சனிக்கிழமை காலை 10 மணி அளவில் கல்லுவிளை SMYM

அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்ட SMYM துணைச் செயலாளர் மெர்னிஷா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தொடக்கவுரை வழங்கினார். தொடர்ந்து மறைமாவட்ட தலைவர் மெர்பின் மற்றும் Jesus Dreamz இசைக்குழுவினர் நிகழ்வுகளை வழிநடத்தினர். இறுதியாக அருட்சகோதரி அமலா FCC அவர்கள் வரவிருக்கின்ற தியானத்தை குறித்தும், அதற்காக நாம் எவ்வாறு தயாரிக்க வேண்டும், என்பதை குறித்தும் சிறந்த முறையில் தெளிவாக வகுப்புகள் நடத்தினார். இறுதியாக மறைமாவட்ட SMYM துணைத்தலைவர் அஞ்சனா அனைவருக்கும் நன்றி கூறினார்.



**சூசைபுரம் மறைவட்ட இளையோர் சந்திப்பு மற்றும் பொறுப்பாளர்கள் தேர்தல்**

சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் சூசைபுரம் மறைவட்ட இளையோர் சந்திப்பு நிகழ்ச்சி 2023 ஏப்ரல் மாதம் 23 ஆம் தேதி ஞாயிற்றுகிழமை நடைபெற்றது. சூசைபுரம், புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் மதியம் 1:30 மணிக்கு பெயர் பதிவுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து 2 மணியளவில் சூசைபுரம் ஆலய இளையோர்கள் இறைவணக்கம் பாடினர். மறை மாவட்ட SMYM ஆலோசகர் ஜெனிஷா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து சூசைபுரம் மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை ஆன்றணி மாடபுரக்கல் அவர்கள் தொடக்க உரையாற்றினார். சூசைபுரம் மறைவட்ட அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் சிறப்புரை வழங்கினார். மறைமாவட்ட SMYM இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் “இளையோர் மனதில் இயேசு” என்ற தலைப்பில் இளையோர்களின் நம்பிக்கை வாழ்வை அடிப்படையாகக் கொண்டு வகுப்புகள் நடத்தினார். அதை தொடர்ந்து மறைமாவட்ட இணைதலைவர் ஜாஸ்மின் அவர்கள் “இன்றைய சமூகத்தில் இளையோர்கள்” என்ற தலைப்பில் மிகவும் கலகலப்பான முறையில் விவாதம் நடத்தினார். அதை தொடர்ந்து மறைமாவட்ட செயலர் மெரின் சுஜித் “தற்போதைய சமூகத்தில் வேலை வாய்ப்புகள்” என்ற தலைப்பில் வேலையின்மை பற்றியும் அதை மாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்தும், சமூகத்தில் உள்ள வேலைகளை எவ்வாறு கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும் என்பதை குறித்து

வகுப்புகள் நடத்தினார். தொடர்ந்து மறைவட்ட பொறுப்பாளர்களுக்கான தேர்தல் நடைபெற்றது. மறைமாவட்ட தலைவர் மெர்பின் தலைமைத்துவம் பற்றியும், தலைவர்களுக்கான பண்புகள் பற்றியும் எடுத்துக்கூறினார். பின்னர் நடைபெற்ற தேர்தலில் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

| | பொறுப்பு | பெயர் | அலகு |
|---|---|---|---|
| 1 | தலைவர் | வின்ஸ் | பாலப்பள்ளம் |
| 2 | இணைத்தலைவர் | அஷ்மியா | சூசைபுரம் |
| 3 | துணைத்தலைவர் | ஆஷா | பாத்திமாபுரம் |
| 4 | செயலர் | ஜெனிஷா | தக்காளிவிளை |
| 5 | துணைச்செயலர் | அபிஷால் | பிலாங்கரை |
| 6 | பொருளர் | அஜித் | கிள்ளியூர் |

மறைமாவட்ட SMYM செயலர் மெரின் சுஜித் புதிய பொறுப்பாளர்களுக்கு வாழ்த்துக்களும் பழைய பொறுப்பாளர்களுக்கு நன்றியும் கூறினார். இறுதியாக ஜெசிலா மேரி அனைவருக்கும் நன்றி கூறினார். சூசைபுரம் மறைவட்ட ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி டீனா SABS மற்றும் சூசைபுரம் SMYM உறுப்பினர்கள் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

## தக்கலை - பிலாங்காலை மறைவட்ட இளையோர் சந்திப்பு மற்றும் பொறுப்பாளர்கள் தேர்தல்

சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் தக்கலை - பிலாங்காலை மறைவட்ட இளையோர் சந்திப்பு நிகழ்ச்சி 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி ஞாயிற்றுகிழமை நடைபெற்றது. பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் ஆலய வளாகத்தில் மதியம் 1:30 மணிக்கு பெயர் பதிவுடன் ஆரம்பமானது. தொடர்ந்து 2 மணியளவில் காட்டாத்துறை ஆலய இளையோர்கள் இறைவணக்கம் பாடினர். காட்டாத்துறை SMYM உறுப்பினர் ஜியோ ஷெரின் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து தக்கலை - பிலாங்காலை மறைவட்ட இயக்குனர் பேரருட்தந்தை தோமஸ் தெக்கேத்தல அவர்கள் தொடக்க உரையாற்றினார். மறைமாவட்ட SMYM இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் “இளையோர் மனதில் இயேசு” என்ற தலைப்பில் இளையோர்களின் விசுவாச வாழ்வை அடிப்படையாகக் கொண்டு வகுப்புகள் நடத்தினார். தொடர்ந்து மறைவட்ட பொறுப்பாளர்களுக்கான தேர்தல் நடைபெற்றது. மறைமாவட்ட தலைவர் மெர்பின் தலைமைத்துவம் பற்றியும், தலைவர்களுக்கான பண்புகள் பற்றியும் எடுத்துக்கூறினார். பின்னர் நடைபெற்ற தேர்தலில் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

| | பொறுப்பு | பெயர் | அலகு |
|---|---|---|---|
| 1 | தலைவர் | அலெக்ஸ் | பிலாங்காலை |
| 2 | இணைத்தலைவர் | ரெனிஷ் | காட்டாத்துறை |
| 3 | துணைத்தலைவர் | ஜிஜி செபாஸ்டின் | நாகர்கோவில் |
| 4 | செயலர் | சபிதா | ஆனையடி |
| 5 | பொருளர் | ஜாக்லின் ஜாஸ்மி | கைசாலவிளை |
| 6 | ஆலோசகர் | பெர்சி | பரைக்கோடு |

மறைமாவட்ட SMYM இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் புதிய பொறுப்பாளர்களுக்கு வாழ்த்துகளும் பழைய பொறுப்பாளர்களுக்கு நன்றியும் கூறினார். இறுதியாக மெர்லின் அனைவருக்கும் நன்றி கூறினார். தக்கலை - பிலாங்காலை மறைவட்ட SMYM உறுப்பினர்கள் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.



**படந்தாலுமூடு மறைவட்ட மற்றும் பொறுப்பாளர்கள் தேர்தல்**

சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் படந்தாலுமூடு மறைவட்ட பொறுப்பாளர்கள் தேர்தல் 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி ஞாயிற்றுகிழமை படந்தாலுமூடு, திருஇதய மறைவட்ட ஆலய வளாகத்தில் நடைபெற்றது. 3.00 மணிக்கு தூய ஆவிப்பாடலுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. தொடர்ந்து மறைமாவட்ட இணைத்தலைவர் ஜாஸ்மின் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். படந்தாலுமூடு மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை சுமேஷ் தொடக்கவுரை வழங்கினார். தொடர்ந்து மறைவட்ட பொறுப்பாளர்களுக்கான தேர்தல் நடைபெற்றது. மறைமாவட்ட செயலர் மெரின் சுஜித் தலைமைத்துவம் பற்றியும், தலைவர்களுக்கான பண்புகள்

பற்றியும் எடுத்துக்கூறினார். பின்னர் நடைபெற்ற தேர்தலில் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

| | பொறுப்பு | பெயர் | அலகு |
|---|---|---|---|
| 1 | தலைவர் | ஜெபின் | கழுவன்திட்டை |
| 2 | இணைத்தலைவர் | அகிலா | தெற்றியோடு |
| 3 | துணைத்தலைவர் | கிரன் | அன்னிக்கரை |
| 4 | செயலர் | பெனிஷா | படந்தாலுமூடு |
| 5 | துணைச்செயலர் | சபிதா | தெற்றியோடு |
| 6 | பொருளர் | ஆஷிக் ஜெபா | பளுகல் |

மறைவட்ட SMYM இயக்குனர் அருட்தந்தை சுமேஷ் அவர்கள் புதிய பொறுப்பாளர்களுக்கு வாழ்த்துக்களும் பழைய பொறுப்பாளர்களுக்கு நன்றியும் கூறினார். அருட்தந்தை அவர்களின் இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவு பெற்றது.



## அலகு சந்திப்பு



தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் தற்போது பங்குகளவில் நடைபெறும் அலகுகளை பார்வையிட்டு வருகின்றனர். ஞாயிற்றுகிழமைகளில் அந்தந்த பங்குகளில் திருப்பலியில்

பங்கேற்று அலகு சந்திப்பு நடைபெற்று வருகிறது. 16.04.2023 அன்று காட்டாத்துறை மற்றும் நீதிபுரம் ஆலயத்திலும், 23.04.2023 அன்று கைசாலவிளை மற்றும் பிலாங்காலை ஆலயத்திலும் நடைபெற்றது.

**Jesus Dreamz இசைக்குழு**

சீரோ மலபார் இளையோர் இயக்கத்தில் செயல்படும் **Jesus Dreamz** இசைக்குழுவினரின் தலைமையில் 2023 ஏப்ரல் 05 அன்று தவக்காலத்தை முன்னிட்டு பிலாங்கரை புனித லொரோட்டா மாதா ஆலயத்தில் Taize Prayer நடைபெற்றது.

*இவண்*

*மெரின் சுஜித், செயலர்*

| BIRTHDAY OF REV. FATHERS- MAY - 2023 | |
|---|---|
| Fr. Tobin Alapurackal | 02 |
| Fr. Subin Scaria Puthenpurackal | 04 |
| Fr. Robin Jose | 05 |
| Fr. Jogesh Joseph | 09 |
| Fr. Davis Karukappally CMI | 10 |
| Fr. Shijo Jose Aikkarakunnel | 13 |
| Fr. Stanley Chelliyil CMI | 14 |
| Fr. John Paul Puthuvalputhen | 17 |
| Fr. Jogy Marangattu CMI | 18 |
| Fr. Ginoy Thottiyil | 24 |
| Fr. Jiji Thomas Koipuram | 25 |
| Fr. Robin Koorumullil | 25 |
| Fr. Christudas M | 28 |
| Fr. Tinu Kottackaparampil CMI | 29 |




**இல்வாழ்வு இயக்கம்**

இல்வாழ்வு இயக்கத்தில் மது மற்றும் மனநோய் மருந்துகள் வழங்க டாக்டர் றாபின் அவர்கள் மாதத்தின் முதல் மற்றும் மூன்றாவது திங்கள்கிழமை வருகைப்புரிந்து மருந்து மற்றும் அறிவுரையை வழங்கி வருகிறார்கள். இம் மாதத்தில் சுமார் 50 நோயாளிகள் பயன் அடைந்துள்ளனர்.

**மாதர் ஜோதிஸ் இயக்கம்**

நோன்பு காலத்தில் ஈசோவோடு பயணிப்போம் என்னும் இறைவார்த்தை எழுதும் போட்டி மறைவட்ட அளவில் பிப்ரவரி 20 ம் தேதி சாம்பல் திங்கள் முதல் ஈஸ்டர் திருநாள் வரை நடத்தப்பட்டது. 50 நாள் நோன்பு காலத்தில் ஒவ்வொரு நாளும் குறைந்தது 10 இறைவசனமாவது எழுதி புகைப்படம் எடுத்து தாய்மார்கள் அந்தந்த மறைவட்ட பொறுப்பாளருக்கு அனுப்பி வைத்தார்கள். இப்போட்டியில் ஏராளமான தாய்மார்கள் கலந்து கொண்டனர். மேலும் இந்த ஆண்டு திருவிவிலியத்தை முழுமையாக எழுதி 2 தாய்மார்கள் சமார்ப்பித்தார்கள்.



மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் சார்பாக மறைமாவட்ட துணைத்தலைவர் ராஜிதா மற்றும் செயலர் பென்சி ஆகியோர் 14.4.2023 அன்று பள்ளிக்கோணம் மற்றும் காரோடு அலகுகளையும் 19.4.2023 அன்று நெட்டா மற்றும் மேளக்கோடு அலகுகளையும் 20.4.2023 அன்று பத்துகாணி மற்றும் ஆறுகாணி அலகுகளையும் சந்தித்து இயக்கத்தின் நிறை குறைகளை கேட்டறிந்தனர்.

2022 - 2023 ம் ஆண்டின் ஆண்டு விழாவானது மே 14, 2023 கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***




# வின்சென்ட்- தே-பவுல் சபை

மஞ்சாலுமூடு வட்டார சபைக்குட்பட்ட, முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தில் செயல்பட்டு வரும் புனித மேரி பெண்கள் கிளை சபை சார்பில் சிறு கடனுதவி திட்டத்தின் கீழ் ரூ10000 வீதம் 11 நபர்களுக்கு ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சுபின் புத்தன்புரைக்கல் அவர்களால் வழங்கப்பட்டது. நிகழ்வில் மஞ்சாலுமூடு வட்டார சபை தலைவர் ஜார்ஜ் வின்சென்ட் மற்றும் மத்திய சபை உறுப்பினர் சகோ வில்சன் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

மஞ்சாலுமூடு வட்டார சபைக்குட்பட்ட புனித பெனடிக்ட் ஆண்கள் கிளைச்சபை சார்பாக 8.4. 2023 அன்று பெருஞ்சிலம்பு இறைப்பராமரிப்பு இல்லம் சந்திப்பு நடைபெற்றது. பின்னர் அவர்களுக்கு சிறு உதவியாக ரூ.3500 வழங்கப்பட்டது.

புனித அந்தோனியார் ஆலயம் வயலின்கரை ஆண்கள் மற்றும் பெண்கள் கிளைச் சபைகள் சேர்ந்து செங்கோட்டையில் உள்ள அன்பு இல்லத்தை 22.04.2023 சந்தித்து அவர்களுக்கு நிதி உதவியாக Rs. 27000/- வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த நிகழ்வானது தவக்காலத்தில் எமது பங்கில் உள்ள குடும்பங்கள் மற்றும் இதர குடும்பங்களையும் வின்சென்டியர்கள் சந்தித்து அவர்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டது. இந்த நிகழ்விற்கு எமது ஆண்கள் மற்றும் பெண்கள் கிளைச்சபை தலைவர்கள் சிறப்புடன் செயல்பட்டு நிகழ்வினை சிறப்பித்தனர்.






***சகோ. D.Pஷாஜி,***
***தகவல் தொடர்பு அலுவலர்***

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

## பெண்கள் தினம்-2023

பெண்களின் சிறப்பினையும் உரிமைகளையும் உலகிற்கு பறைசாற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 தேதி பெண்கள் தினம் கொண்டாடப்படுகிறது. கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் இயங்கும் சுய உதவி குழுக்களின் பெண்கள் தினம் மற்றும் விழா பிப்பிரவரி 16 முதல் மார்ச் 26 தியதி வரை 28 மையங்களில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்சியில் KKSSS-ன் இயக்குநர் அருட்தந்தை தாமஸ் பூவத்துமூட்டில் மற்றும் KKSSS இனை இயக்குநர் தந்தை மகேஷ் அவர்கள் கலந்து கொண்டு பெண்கள் முன்னேற்றத்திற்கான கருத்துக்களையும் பெண்கள் தொழில் முனைவோர் திட்டம் தொடங்குவதாகவும் கூறினார்கள். இத்திட்டமானது சமீப காலமாக பணிக்கு செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. பெண்கள் பணிக்கு செல்வதன் முக்கிய நோக்கம் குடும்ப வருமானத்தை பெருக்கி கொள்வதற்குதான். நகர்ப் புறங்களில் பெண்கள் அலுவல் சார்ந்த பணிகளுக்கு அதிக அளவில் செல்கின்றனர். அதே சமயத்தில் சுய தொழில் முனைவோர்களை பொறுத்தவரை பெண்களின் எண்ணிக்கை இந்தியாவில் குறைவுதான். பணிக்கு செல்வதற்கு ஒத்துழைப்பு அளிக்கும் ஆண்கள், பெண்கள் தொழில் முனைவோராக உருவாவதற்கு பொரும்பாலும் ஒத்துழைப்பு தருவதில்லை. இந்த நிலை மாற வேண்டும். அப்போது தான் இந்தியாவில் பெண் தொழில் முனைவோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என கூறினார்கள்.




விழாவில் சிறப்பு விருந்தினராக ஒவ்வொரு மைய பங்கு தந்தையர்கள், பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் வங்கி பணியாளர்கள் ஆகியோர் கலந்து

கொண்டு பெண்கள் தினம்-2023 என்ற கருத்தினை மையமாக வைத்து சிறப்புரை வழங்கினார்கள். நிகழ்விற்கு இடையே பல்வேறு விதமான கலைநிகழ்வுகள் நடைபெற்றது. சிறப்பான கலைநிகழ்வை ஊக்குவிக்கும் விதமாக பரிசு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வுகளை அந்த பகுதி களப்பணியாளர்கள் ஒருங்கிணைத்தார்கள.

**Educare - 5 நிலை**

தக்கலை மறைமாவட்டத்திற்குப்பட்ட ஏழை மாணவர்களை ஆங்கில புலமையுடன் கூடிய திறமையானவர்களாக பயிற்சி அளித்து வருவது Educare அலகு. இந்த அலகு வழியாக 3 நிலை மாணவர்கள் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். இந்த அலகின் 5 ம் நிலை புதிய மாணவர் சேர்க்கை மார்ச் 4 ம் தேதி KKSSS அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. இதில் மாணவர்களின் KKSSS இயக்குநர் தந்தை தோமஸ் செபஸ்டியன் அவர்கள் நேர்முக தேர்வு நடத்தி வருங்கால திட்டத்தினை விளக்கி கூறினார். Educare ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி. மெரின் றோஸ் அவர்கள் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி கூறினார்கள். தக்கலை மறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பங்குகளிலிருந்து மாணவர்கள் பங்கேற்றனர். இதில் 25 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட 5-அலகு மாணவர்களின் வகுப்பு துவக்க விழா KKSSS இயக்குநர் அருட்தந்தை தோமஸ் செபஸ்டியன் அவர்கள் தலைமையில் மார்ச் 14 தேதி KKSSS அரங்கில் நடைபெற்றது. துணை இயக்குநர் தந்தை மகேஷ் மற்றும் அருட்தந்தை சுபின் ஸகரியா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து 4 மற்றும் 5-ம் அலகு மாணவர்களுக்கான Educare வகுப்பு நடைபெற்றது இதில் 44 மாணவர்கள் கலந்து கொண்டனர்.



***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

# அருட்சகோதரர்களிடமிருந்து

ஈசோ மெசியாவில் அன்பானவர்களே,

ஏப்ரல் மாதம், புனித வாரத்தில் அனைத்து அருட்சகோதரர்களும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பங்குகளில் இறைப்பணி செய்தனர்.

2023 ஏப்ரல் 03 அன்று, காலை 07.00 மணிக்கு தக்கலை சங்கமத்தில். அருட்சகோதரர்களுக்கான குருத்துவ ஆயத்த அருட்பொழிவுகள் நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB நிகழ்வுகளை தலைமையேற்று நடத்தினார். அருட்சகோதரர். திவின் ராஜ் குருத்துவ திருவுடை பெற்றுக்கொண்டார். அருட்சகோதரர். வர்கீஸ் கோயிக்காக்குடியில், அருட்சகோதரர். யோசப் வட்டக்கோணம் மற்றும் மேத்யூ கல்லம்பறம்பில் வாசகர் பட்டம் (காறோயா) பெற்றனர். அருட்சகோதரர். சுனில் ஆண்டனி உதவி திருத்தொண்டர் (ஹெவ்பதியாக்கோனா) பட்டமும் பெற்றார். நிகழ்வில் அருட்சகோதரர்களின் பெற்றோர், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அருட்தந்தையர்கள் பலர் கலந்துகொண்டனர்.

2023 ஏப்ரல் 4, அன்று, கழுவன்திட்டை புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயத்தில், திருத்தொண்டர் அருட்பொழிவு நிகழ்வுகள் மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கினார். அருட்சகோதரர். வர்கீஸ் (அமான்டோ) எடக்கூட்டத்தில், அருட்சகோதரர். ஆண்டனி (லிண்டோமன்) தகிடியல், மற்றும் அருட்சகோதரர். குருவிலா (சஞ்சோ) தேன்பிளக்கல் ஆகியோர் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

ஏப்ரல் 12, 13 மற்றும் 15 ஆகிய தேதிகளில் திருத்தொண்டர்கள் ஜார்ஜ் குட்டி, பிரின்ஸ் மற்றும் அஜின் ஆகியோர் குருத்துவ அருட்பொழிவு பெற்று குருக்களாக திருநிலைபடுத்தப்பட்டனர்.

தொடர்ந்து அருட்சகோதரர்களுக்கான பணி முகாம் தென்காசி மறைபரப்பு பகுதியில் 2023 ஏப்ரல் 16 முதல் 23 வரை நடைபெற்றது. 22 ம் தேதி சுற்றுலாவுடன் முகாம் நிறைவு பெற்றது. இந்நாட்களில் நடைபெற்ற வீடு சந்திப்புகள், களபணிகள் மற்றும் துப்புரவு பணிகள் புதிய அனுபவமாக அமைந்தது. வேலை முகாமுக்கு இடையில் எங்களை சந்தித்து ஊக்கமூட்டிய அனைத்து அருட்தந்தையர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.

தக்கலை சங்கமத்தில் ஒரு வார தமிழ் வகுப்பு, ஏப்ரல் 24 முதல் 28 வரை நடைபெற்றது. தக்கலை இளையோர் கல்வி பணியகத்தின்

(TYES) இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ், ஒருங்கிணைப்பாளர் சஜின் அவர்களின் உதவியுடன் பொறுப்பேற்று நடத்தினார். இதற்கான பிற ஏற்பாடுகளை அருட்சகோதரர்களின் இயக்குநர் அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் மேற்கொண்டார். அருட்சகோதரர்கள் அனைவரும் மிக ஆர்வத்துடன் இவ்வகுப்பில் கலந்து கொண்டனர்.

தற்போது பங்குகளில் நடைபெறும் விசுவாச பயிற்சி வகுப்புகளில் அருட்சகோதரர்கள் சிறந்த முறையில் அனைத்து நிகழ்வுகளையும் வழிநடத்தி வருகின்றனர்.

திருத்தொண்டர்களாக உயர்த்தப்பட்ட திருத்தொண்டார்கள் ஆண்டனி தகிடியேல், வர்கீஸ் இடக்கூட்டத்தில் மற்றும் குருவிள தேனேபிளாக்கல் ஆகியோருக்கும் அருட்தந்தையர்களாக அருட்பொழிவு பெற்ற அருட்தந்தையர்கள் அஜின் ஜோசப், ஜோசப் சேரிப்பநாட்டு, ஜார்ஜ் குட்டி கண்டத்தில் ஆகியோருக்கும் அருட்சகோதரர்களின் மனமார்ந்த வாழ்த்துக்களும் ஜெபங்களும் தெரிவித்துகிகொள்கிறோம். எங்களுக்காக ஜெபித்த உங்கள் அனைவருக்கும் நன்றி.

***சகோ. சுனில் ஆன்டணி***

---

# *தென்காசி மறைத்தள செய்திகள்*

**புனித வாரக் கொண்டாட்டம்**

தென்காசி மறைத்தளத்தில் அனைத்து ஆலயங்களிலும் புனித வார நிகழ்வுகளான ஓசன்னா ஞாயிறு, பாஸ்கா வியாழன், மற்றும் உயிர்ப்பு ஞாயிறு போன்றவை சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது. புனித வெள்ளி அனைத்து பங்குகளிலிருந்தும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் ஒன்றிணைந்து பார்டரிலிருந்து வாஞ்சிநகர் ஆலயம் வரை சிலுவைப் பாதை திருபயணம் நடத்தினர். இறுதியில் அருட்தந்தை ராஜேஷ் MCBS அவர்கள் மறையுரை ஆற்றினார். ஒருங்கிணாப்பாளர் அருட்தந்தை தோமஸ் தக்கலை அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**ஒருநாள் சுற்றுலா**

தென்காசி மறைத்தளத்தை சார்ந்த அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்கள் இணைந்து ஏப்ரல் மாதம் 26 ஆம் தேதி ஒருநாள் சுற்றுலா நடைபெற்றது.

# தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

**மாரத்தான் போட்டி**

தக்கலை மறை மாவட்ட நலவாழ்வு பணிக்குழுவும் சூசைபுரம், புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் இணைந்து "உலகளாவிய நலவாழ்வு தினத்தை" முன்னிட்டு மாபெரும் மாரத்தான் போட்டி நடைபெற்றது. குளச்சல் துறைமுகம் முதல் சூசைபுரம் புனித அல்போன்சா கல்லூரி வரையிலான 12 கிலோ மீட்டர் தூரம் போட்டி எல்லையாகத் நிர்ணைக்கப்பட்டிருந்தது. தக்கலை மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் கொடியசைத்து தொடக்கி வைத்தார். தக்கலை மறை மாவட்ட நலவாழ்வு பணிக்குழு இயக்குனர் அருட்பணி மகேஷ் தலைமை தாங்கினார். குளச்சல் பங்குத்தந்தை ராஜ், புனித அல்போன்சா கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ், கல்லூரி கல்வி இயக்குனர் அருட்தந்தை முனைவர் மைக்கேல் ஆரோக்கியசாமி SDB ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் புனித அல்போன்சா கல்லூரி உடற்கல்வி இயக்குனர் முனைவர் A.P சீலன் வரவேற்புரை வழங்கினார். தக்கலை மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கினார். குளச்சல் துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு. தங்கராமன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தமிழக ஆயர் பேரவையின் செயலர் அருட்சகோதரி ஜோஸ்பின் CTC, கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ், கல்லூரி கல்வி இயக்குனர் அருட்தந்தை முனைவர் மைக்கேல் ஆரோக்கியசாமி SDB, அருட்தந்தை மகேஷ், கல்லூரி துணை முதல்வர் முனைவர் ஆர். சிவனேசன் ஆகியோர் மாரத்தான் போட்டியில் கலந்து கொண்ட மற்றும் வெற்றி பெற்ற வீரர்களை வாழ்த்திப் பேசினர். வெற்றி பெற்றோர் விவரம்

| Rank | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| I | அகில் ராம் (நேசமணி கல்லூரி, மார்த்தாண்டம்) | ரம்யா.R (திருச்சிலுவை கல்லூரி, நாகர்கோவில்) |
| II | அஜீஸ் (நேசமணி கல்லூரி, மார்த்தாண்டம்) | அக்யா பாபு (நேசமணி கல்லூரி, மார்த்தாண்டம்) |

| | | |
|---|---|---|
| **III** | வினிஷ் பெஞ்சமின் (ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி, நாகர்கோவில் ) | ஜெஸ்லி (RPA பள்ளி, மாமூட்டுக்கடை) |

சிறப்புப் பரிசினை அஜித்குமார், எஸ்.ஏ. முருகன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். வெற்றிபெற்றவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் பரிசுகளை வழங்கினர். இந்நிகழ்விற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு இயக்குநர் அருட்தந்தை மகேஷ் மற்றும் புனித அல்போன்சா கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் ஆகியோர் முன்னின்று செய்திருந்தனர்.



***அருட்சகோதரி. டயானா SDS***
***செயலர்***

# வரவிருக்கும் நிகழ்வுகள்

பேராயர் மார் ஜோசப் பௌவ்வத்தில் நினைவுத்திருப்பலி,
படந்தாலுமூடு – மே *04*
குருக்களுக்கான கூட்டம் – மே *11*
அருட்பணி பேரவை, சங்கமம் – மே *20*
அருட்தந்தையார்கள் இடமாற்றம் – மே *24*
மறைக்கல்வி ஆசிரியர்கள் தியானம், கல்லுவிளை – மே *26, 27*
கைக்காரர் மற்றும் கணக்கர்களுக்கான உருவாக்கால் பயிற்சி,
சங்கமம் – மே *28*

# தக்கலை இளையோர் கல்வி பணியகம்
# Thuckalay Youth Educational Services
in Collaboration with Trichy Don Bosco Vazhikatti

## கல்லூரி மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி

நாகர்கோவில் புனித சேவியர் பொறியியல் கல்லூரியில் MBA மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி வகுப்பானது 17.4.2023 மற்றும் 18.4.2023 ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. திருச்சி கலை கல்லூரி பேராசிரியராக பணியாற்றி வரும் திருச்சி டோன் போஸ்கோ வழிகாட்டியின் உறுப்பினரான திரு ஆல்பின் அவர்களால் நடத்தப்பட்டது. முதல் நாளாகிய ஏப்ரல் 17 அன்று நிறுவனங்களின் எதிர்பார்ப்புகள், விதிகளை மாற்றுவது, நுண்ணறிவை வளர்ப்பது, ஆளுமையை மேம்படுத்துவது, புதுமை மற்றும் பகுப்பாய்வு ஆகிய தலைப்புகளிலும் இரண்டாவது நாளாகிய ஏப்ரல் 18 அன்று சுய பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு, குழு கருந்துரையாடல், சுய அறிமுகம், ஆளுமை சோதனை, தற்குறிப்பு உருவாக்குதல் போன்ற தலைப்புகளிலும் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. நடைபெற்ற வகுப்பில் முதல்நாளில் 107 பேரும் இரண்டாவது நாளில் 98 பேரும் கலந்து கொண்டனர். இந்த பயிற்சி வகுப்பிற்கு தேவையான ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகம் சிறப்பாக செய்திருந்தது. தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம் நிகழ்வுகளை சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தது.



## அருட்சகோதரர்களுக்கான தமிழ் வகுப்புகள்



தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகத்தின் ஒருங்கிணைப்பால் அருட்சகோதரர்களுக்கான தமிழ்மொழி பயிற்சி முகாமானது ஏப்ரல் 24 முதல் 28 வரை உள்ள ஐந்து நாட்கள் தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. ஜோசப் சந்தோஷ் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் சஜின் அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.

# மறைமாவட்டச் செய்திகள்

## ▶ மறைவட்ட அளவில் அருட்தந்தையர் கூட்டம்

2023 ஏப்ரல் 1, அன்று படந்தாலுமூடு மற்றும் நித்திரவிளை மறைவட்ட அருட்தந்தையர்களுக்கான கூட்டம் அன்னிக்கரை, புனித மேத்யூ ஆலயத்தில் நடைபெற்றது. காலை 11:00 மணிக்கு தொடங்கிய இக்கூட்டத்தில். அருட்தந்தை. ஜான்சிலால் கூரியா பிரதிநிதியாக கலந்து கொண்டார். மறைவட்ட முதன்மை பணியாளர்கள் தலைமை தாங்கினர்.

2023 ஏப்ரல் 3-ஆம் தேதி மஞ்சாலுமூடு, களியல், ஆறுகாணி மறைவட்ட அருட்தந்தையர்களுக்கான கூட்டம் மாலை 06:30 மணியளவில் களியல், புனித மரியன்னை மறைவட்ட ஆலயத்தில் நடைபெற்றது. குருகுல முதல்வர். பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில், கூரியா பிரதிநிதியாக கலந்து கொண்டார். அந்தந்த மறைவட்ட முதன்மை பணியாளர்கள் தலைமை தாங்கினர்.

## ▶ அருட்தந்தையர்களுக்கான ஒருநாள் தியானம்

2023 ஏப்ரல் 5 அன்று பெசகா வியாழன் முன்னதாக மறைமாவட்டத்தின் அனைத்து அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளுக்கான ஒரு நாள் தியானம் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் நடைபெற்றது. ஜெபமாலையுடன் தொடங்கிய இந்நிகழ்வில் கோட்டாரறு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை சர்வேசியஸ் இந்நிகழ்வை வழிநடத்தினார். தொடர்ந்து, புதிதாக பிரசுரிக்கப்பட்ட விண்பாதையில் புத்தகம் குறித்து விளக்கவுரை வழங்கப்பட்டது. சீனாய் தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை அனில் ராஜ் இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

## ▶ குருத்துவ அருட்பொழிவு

தக்கலை மறைமாவட்டத்தில் இந்த வருடம் 3 அருட்தந்தையர்கள் திருநிலைபடுத்தப்பட்டனர். 2023 ஏப்ரல் 12 அன்று, பாலா, லாலம் புத்தன்பள்ளி புனித ஜார்ஜ் தேவாலயத்தில் திருத்தொண்டர் ஜார்ஜ் கண்டத்தில் குருத்துவ அருட்பொழிவு பெற்றார். 2023 ஏப்ரல் 13 அன்று, தோவராயர் குழந்தை இயேசு ஆலயத்தில் திருத்தொண்டர் ஜோசப் (பிரின்ஸ்) செரிப்பநாட்டு குருத்துவ அருட்பொழிவு பெற்றார். 2023 ஏப்ரல் 15, அன்று, நித்திரவிளை, ஜெயமாதா மறைவட்ட ஆலயத்தில் திருத்தொண்டர் அஜின் சி. ஜோசப் குருத்துவ அருட்பொழிவு பெற்றார். புதிய குருக்களுக்கு மறைமாவட்டத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

### நம்பிக்கை ஆலயம் – வெள்ளிவிழா கொண்டாட்டம்

கழுவந்திட்டை நம்பிக்கை ஆலயம் மனநலம் குன்றியவர்களுக்கான பள்ளியின் வெள்ளி விழா 2023 ஏப்ரல் 14 மாலை 5:30 மணிக்கு, நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்கள் அருட்சகோதரி ஆன்சி SH, டாக்டர் K. விஜய குமார் MD ஆகியோர் பங்கேற்றனர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தையர்கள் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் மற்றும் அருட்சகோதரி டாம்சி SH சிறப்பாக செய்திருந்தனர்.

### குருசடி மந்திரிப்பு – நித்திரவிளை

நித்திரவிளை சந்திப்பில் புதிதாக கட்டப்பட்ட குருசடியின் மந்திரிப்பு 2023 ஏப்ரல் 16 அன்று மாலை 5:00 மணிக்கு நடைபெற்றது. புதிய குரு அருட்தந்தை அஜின் C. ஜோசப் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். தொடர்ந்து மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் புதிய குருசடி மந்திரிக்கப்பட்டது. நித்திரவிளை மறைவட்டத்தை சார்ந்த அருட்தந்தையர்கள் பலர் கலந்து கொண்டனர். பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் இதற்கான முயற்சிகளை சிறப்பாக செய்திருந்தார்.

### அருட்தந்தையர் இல்ல மந்திரிப்பு – பெங்கிரி

பெங்கிரி புனித பெனடிக்ட் ஆலய வளாகத்தில் அருட்தந்தையர்கள் தங்குவதற்கான இல்லம் 2023 ஏப்ரல் 16 அன்று மாலை 04.30 மணிக்கு அருட்தந்தை சுமேஷ் வள்ளியாம்தடத்தில் அவர்களால் மந்திரிக்கப்பட்டது. அருட்தந்தை ஷிஜோ ஐக்கரகுன்னேல் இதற்கான முயற்ச்சிகளை சிறப்பாக செய்திருந்தார்.

### அருட்சகோதரர்களுக்கான பணி முகாம்

அருட்சகோதரர்களுக்கான பணி முகாம் தென்காசி மறைபரப்பு பகுதியில் 2023 ஏப்ரல் 16 முதல் 23 வரை நடைபெற்றது. தொடர்ந்து 22 ம் தேதி சுற்றுலாவுடன் முகாம் நிறைவு பெற்றது. இதற்கான நிகழ்வுகளை அருட்தந்தை டென்சி முண்டுநடக்கல் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தார்.

### இறையழைத்தல் வாரம் கொண்டாட்டம்

தக்கலை மறைமாவட்டத்தில் இறையழைத்தலை ஊக்குவிக்கும் விதமாக 2023 ஏப்ரல் 16 முதல் 30 வரையிலான நாட்களில் இறையழைத்தல் வாரம் கொண்டாடப்பட்டது. இதற்காக சிறப்பு ஜெபம் மற்றும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அனைத்து ஆலயங்களிலும் ஒளியேற்றி

இறையழைத்தல் வாரம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுகளுக்கு எல்லா முயற்சிகளையும் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் சிறப்பாக செய்திருந்தார்.

### சர்வதேச GGM கூட்டம்

பியட் மிஷனின் சர்வதேச அளவிலான GGM (Great Gathering of Mission) கூட்டம், திருச்சூர், ஜெருசலேம் தியான மையத்தில் 2023 ஏப்ரல் 19 முதல் 23 வரை நடைபெற்றது. மறைமாவட்டங்களின் இறைபணிகள் காட்சிப்படுத்துவதற்கான அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது. தக்கலை மறைமாவட்டத்திலிருந்து அருட்சகோதரர் வின்சிலின் மற்றும் அருட்சகோதரர் பிபின் ஆகியோர் கலந்து கொண்டு மறைமாவட்டப் பணிகளை காட்சிப்படுத்தினர். அருட்தந்தை றோபின்ஸ் குழிக்கோடில் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்

### FABC கூட்டம் – காத்மண்ட், நேபாளம்

ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பின் (FABC) கீழ் உள்ள ஆயர்களின் மாநாடு 2023 ஏப்ரல் 23 முதல் 28 வரை நேபாளம் நாட்டிலுள்ள காத்மாண்டில் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்டத்திலிருந்து ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் கலந்து கொண்டார். இந்தியா, இலங்கை மற்றும் வங்காளதேச நாட்டைச் சார்ந்த 20 ஆயர்கள் உட்பட 30 பேர் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

### விண்பாதையில் மற்றும் உறவிய வழிபாட்டு நூல்

வழிபாட்டு முறை கொண்டாட்டங்களை எளிதாக்கவும், தனிப்பட்ட மற்றும் குடும்பத்தை செயல்படுத்தவும் விண்பாதையில் VINPATHAYIL என்ற தலைப்பில் செபம் மற்றும் பாடல் புத்தகத்தை மறைமாவட்டம் வெளியிட்டுள்ளது. மேலும், உறவியங்களின் போது உறவிய வழிப்பாடு நூல் வெளியிட்டப்பட்டுள்ளது, 2023 ஏப்ரல் 30 முதல் இந்த இரண்டு புத்தகங்களும் நடைமுறைக்கு வந்துள்ளது.

---

| FEASTDAYS OF REV. FATHERS - APRIL 2023 | |
|---|---|
| Fr. Babu Thattil  CMI | 01 |
| Fr. Alex Puthettu | 03 |

## இதர செய்திகள்

- உரோமையில் முதலாம் ஆண்டு இறையியல் படித்து வந்த அருட்சகோதரர் ஆல்வின் ஜான் தனது படிப்பை நிறுத்தியுள்ளார்.
- தென்காசி மறைபரப்பு தள வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் மகிழ்வாக அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் இணைந்து 2023 ஏப்ரல் 26 அன்று ஆலப்புழா பகுதியில் சுற்றுலாச் சென்றனர்.
- கடந்த 5 ஆண்டுகள் படந்தாலுமூடு திருஇருதய மெட்ரிக் பள்ளியின் முதல்வராக பணியாற்றிய அருட்சகோதரி பிந்து சாக்கோ MMM அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.
- அருட்சகோதரர் வின்சிலின் மற்றும் அருட்சகோதரர். பிபின் இளங்குருமட பயிற்சி முடித்து, ரூஹாலயாவில் தத்துவியல் படிப்பை தொடங்கவுள்ளனர்.
- அருட்சகோதரர் டிவின் வடவாதூர் குருமடத்தில் இறையியல் படிப்பை தொடங்கவுள்ளார்.
- VPV 2023 : மறைக்கல்வி மாணவர்களுக்கான விசுவாச பயிற்சி விழா 2023 ஏப்ரல் 30 முதல் மே 14 வரையுள்ள நாட்களில் அந்தந்த பங்குகளில் நடைபெறும்.
- சூசைபுரம், புனித அல்போன்சா கல்லூரியின் முதல்வர் திரு. இசையாஸ் MA,M.Ed.,Ph.D. முதல்வர் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.
- இடமாற்றங்கள் 2023 : இந்த ஆண்டு மறைமாவட்டத்தில் சில அருட்தந்தையர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். 2023 மே 5, அன்று சம்பந்தப்பட்ட அருட்தந்தையர்களுக்கு தெரிவிக்கப்படும். இடமாற்றங்கள் 2023 மே 24, முதல் அமலுக்கு வரும்.

**Animation of Kaikars and accountants**

**Place: Sangamam**

**Dates: 28 May 2023, Sunday**

**Time: 09.30 am – 03.30 pm**

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### ▶ புனித வளனார் ஆலயம் – வளன்நகர்

தூய வளனார் ஆலயப் பங்கு குடும்ப விழாவானது 27.4.2023 முதல் 1.5.2023 வரை நடைபெற்றது 27.4.2023 அன்று மாலை 6:30 மணிக்கு பங்கு தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் திருக்கொடி ஏற்றினார். 27.4.2023 முதல் 29.4.2023 வரை உள்ள நாட்கள் மாலை 5.30 மணிக்கு ஜெபமாலையும், அதைத் தொடர்ந்து திருப்பலி, நற்செய்தி பகிர்வு மற்றும் அன்பின் விருந்து நடைபெற்றது. 30.4.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5 மணிக்கு ஆடம்பர கூட்டுத்திருப்பலி மறைமாவட்ட ஆயர் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. அதைத்தொடர்ந்து பவனியும், அன்பின் விருந்தும் நடைபெற்றது. 1.5.2023 அன்று மாலை 5.45 மணிக்கு ஜெபமாலை, திருப்பலி, அதைத் தொடர்ந்து திருக்கொடி இறக்கப்பட்டது. சுமார் 8 மணி அளவில் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அதை தொடர்ந்து அன்பின் விருந்தும் நடைபெற்றது அனைத்து நிகழ்ச்சிகளையும் துணை பங்குத்தந்தை ஆன்றணி மகேஷ் அவர்கள் ஒருங்கிணைத்தார்.



## மஞ்சாலுமூடு

### ▶ புனித குழந்தை தெரசாள் ஆலயம் – மஞ்சாலுமூடு

மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் ஆலய வளாகத்தில் கோடை கால விடுமுறையை பயனுள்ளதாக மாற்ற மாணவ, மாணவிகளுக்கு பயிற்சிகள் 17.4.2023 அன்று தொடங்கப்பட்டது. இப்பயிற்சியில் கம்பியூட்டர், தையல், ஆரி ஒர்க் மற்றும் எம்ராய்டரிங் ஆகிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மூன்று பயிற்சிகளும் பெற கட்டணமாக 300 ரூபாயும், ஒரு பயிற்சி மட்டும் பெற கட்டணமாக 200 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது.

- **புனித பெனடிக்ட் ஆலயம் – பென்கிரி**

புனித பெனடிக் ஆலயம் பென்கிரியில் 16.4.2023 அன்று மாலை 6.00 மணிக்கு அருட்தந்தை சுமேஷ் அவர்கள் தலைமையில் ஆடம்பரத் திருப்பலியும் மாணவ மாணவிகளுக்கு புது நன்மையும் வழங்கப்பட்டது. திருப்பலியை தொடர்ந்து அருட்தந்தையர் இல்ல அர்ச்சிப்பு விழா நடைபெற்றது.



## தக்கலை – பிலாங்காலை

- **புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை**

புனித வார நிகழ்வுகள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஏப்ரல் 15 ம் தேதி பங்குதந்தையின் பிறந்தநாள்விழா பங்கு பேரவை உறுப்பினர்களால் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.



### புனித ஜார்ஜியார் ஆலயம் – ஆனையடி

ஆனையடி ஆலயத்தில் ஜார்ஜியார் திருவிழா ஏப்ரல் 17 முதல் 23 வரை கொண்டாடப்பட்டது. கடைசி நாள் இராசை திருப்பலி நடைபெற்றது. அன்றைய தினம் முதல் முறையாக ஆனையடி பகுதியை சுற்றி தேர்பவனி நடைபெற்றது. இதில் பங்குமக்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### புனித மிக்கேல் திருதொண்டு தளம் – வெள்ளாம்பி

**வெள்ளாம்பி ஆலயத்தில் ஏழை ஒருவருக்கு வீடுகட்ட 10000/- ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.**

## களியல்

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் தேவாலயத்தில் புனித வார நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

2023 ஏப்ரல் 23 அன்று நித்திய வார்த்தைப்பாடு பெற்றுக்கொண்ட அருட்சகோதரி மெரின் சுஜி SDS அவர்களுக்கு பங்களவில் வரவேற்பு வழங்கப்பட்டது. காலை திருப்பலிக்கு பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் தலைமையுரை வழங்கினார். மண்ணின் மைந்தர் அருட்தந்தை ஜாண் ஜோசப் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து கேக் வெட்டி நிகழ்வுகள் சிறப்பிக்கப்பட்டது. பங்கின் சார்பாக நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகள் அனைத்தும் மறைக்கல்வி



ஆசிரியர்கள் தலைமையேற்று ஒருங்கிணைத்திருந்தனர்.

## தூசைபுரம்

### ► கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

2.4.2023 குருத்து ஞாயிறு திருப்பலி ஆனக்குழி அருட்தந்தை தோமஸ் வீட்டுவேலிக்குனேல் அடிகளார் வளாகத்தில் தொடங்கப்பட்டது. தொடர்ந்து ஐக்கிய கிறிஸ்தவ அமைப்பினர் சார்பில் நடைபெற்ற குருத்து ஞாயிறு பவனியாக ஆலயம் வந்து திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

இதர புனித வார நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. 30.4.2023 இறை அழைத்தல் வார நிறைவு நிகழ்வும் பங்குத்தந்தை அருட்தந்தை ஜான்பால் அவர்களின் குருத்துவ அருட்பொழிவின் 12 வது ஆண்டு நினைவு தினமும் அனுசரிக்கப்பட்டது. அன்றைய தினம் சிறப்பு விருந்தினராக ஓசூர் மறை மாவட்ட புதிய குருவான அருட்தந்தை ஜோஜி அவர்கள் வருகை தந்து திருப்பலி நிறைவேற்றினார்கள்.

### ► தூய பாத்திமா அன்னை ஆலயம் – பாத்திமாபுரம்.

தூய பாத்திமா அன்னை ஆலயத்தில் 2.4.23 குருத்தோலை ஞாயிறு அன்று அருட்தந்தை செபி அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அன்றைய தினம் திருப்பலிக்கு பின் பங்குதந்தை ஆன்றனி அவர்களுக்கு பிறந்த நாள் விழா கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

புனித வார நிகழ்வுகள் மிகச்சிறப்பாக நடைபெற்றன.

16.4.23 அன்று ஆடம்பர திருப்பலி நிறைவேற்றப்பட்டு முதல் திருவிருந்து நிகழ்வானது நடைபெற்றது. இதில் முன்னாள் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் கலந்துகொண்டார்கள். அன்றைய தினம் அருட்சகோதரி ஆன்சிட் அவர்களுக்கு பிறந்த நாள்



விழா கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

23.4.23 அன்று திருப்பலி முடிந்த உடன் திருவிழா குறித்து கருத்துகளை கேட்பதற்கு பங்கு தந்தை அருட்சகோதரிகள் கைக்காரர் தலைமையில் பங்கு பேரவை கூட்டமானது ஆலயத்தில் நடைபெற்றது.

- **தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்**

2.4.2023 குருத்து ஞாயிறு திருப்பலி ஜெயமாதா கன்னியர் இல்லத்தில் தொடங்கி பவனியாக ஆலயத்தில் நிறைவடைந்தது. இதர புனித வார நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் சிறப்பு நற்கருணை ஆராதனையும் நடைபெற்று வருகிறது.

- **புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை**

இலாசரஸ் சனிக்கிழமை நினைவாக 01.04.2023 அன்று திருப்பலிக்கு பின் அனைவருக்கும் கொழுக்கட்டை வழங்கப்பட்டது.

03.04.2023 அன்று காலை 4.00 மணி முதல் ஆலயத்தில் 40 மணி நேர நற்கருணை ஆராதனை அருட்தந்தை ஜோகேஷ் தலைமையில் ஆரம்பமானது. அருட்தந்தை சாஜன் நெட்டபங்கு அவர்களால் பாவமன்னிப்பு பற்றிய உரை நடத்தப்பட்டது. தொடர்ந்து பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது.

07.04.2023 புனித வெள்ளி நிகழ்வுகள் காலை 7.00 மணியளவில் ஆராதனையுடன் ஆரம்பமானது. தொடர்ந்து திருப்பாடுளின் வரவாறு மற்றும் சிலுவைப்பாதை நடைபெற்றது. சிலுவைப்பாதையில் மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் இளையோர்கள் 14 நிலைகளையும் நடித்துக்காட்டினர்.

2023 ஏப்ரல் 16 ஞாயிற்றுக்கிழமை இளையோர்கள் சார்பாக உணவுத்திருவிழா அருட்தந்தை ஜோகேஷ் தலைமையில் நடைபெற்றது. அன்றைய நாள் மாணவர்களுக்கு இளையோர்கள் தலைமையில் விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றது.

## நித்திரவிளை

- **ஜெய மாதா மறைவட்ட ஆலயம் – நித்திரவிளை**

ஜெய மாதா மறைவட்ட ஆலயத்தில் புனித வார நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற்றது. ஏப்ரல் 15ஆம் தேதி அருட் சகோதரர் அஜின் C அவர்களின் குருத்துவ அருட்பொழிவு நடைபெற்றது. மேதகு

ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் குருத்துவ அருள் பொழிவு நிறைவேற்றி, புதுகுருவாக அருட்பொழிவு செய்யப்பட்ட குருவானவரை வாழ்த்தினார்கள். தொடர்ந்து புதிய குருவின் முதல் நன்றித் திருப்பலி நடைபெற்றது. மறை மாவட்டத்தில் இருந்து ஏராளமான மக்கள் வருகை தந்து புது குருவானவரை வாழ்த்தினர்.

- **புனித ஜார்ஜியார் ஆலயம் – முஞ்சிறை**

**புனித வார திருச்சடங்குகள் சிறப்பாக நடைபெற்றன.**

**பங்கு பாதுகாவலர் பெருவிழாவும் குடும்ப விழாவும்.**

முஞ்சிறை, புனித ஜார்ஜியார் ஆலயத் திருவிழா மற்றும் பங்கு குடும்ப விழா ஏப்ரல் 21 முதல் 30 ஆம் தேதி முடிய 10 நாட்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 21ஆம் தேதி மாலை 6 மணிக்கு ஜெபமாலை, தொடர்ந்து கொடியேற்றத்துடன் திருவிழா திருப்பலி ஆரம்பமானது. தொடர்ந்து எல்லா நாட்களிலும் ஜெபமாலை மற்றும் திருப்பலி நடைபெற்றது. 30.ஆம் தேதி மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் திருவிழா திருப்பலி



மற்றும் புது நன்மை வழங்குதல் நடைபெற்றது.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி ஷைலா | மெரின் சுஜித்**

## MONTHLY AGENDA – MAY 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Mon | | CAT: VPV Begins |
| 2 | Tue | 09.30 am | CAT: BTCT Kaliyal Forane |
| 3 | Wed | 09.30 am | CAT: BTCT Kaliyal Forane<br>MJ: Edathuva Pilgrimage |
| 4 | Thu | 09.30 am<br>04.00 pm | CAT: BTCT Kaliyal Forane<br>Padanthalumoodu: Archbishop Powathil Remembrance Holy Qurbana |
| 5 | Fri | 09.30am | CAT: BTCT Kaliyal Forane |
| 6 | Sat | 09.30am | CAT: BTCT Kaliyal Forane |
| 7 | Sun | 04.00 pm | Uraviam: Forane Level New Prayer Book Training at Senkottai |
| 8 | Mon | 09.30am | CAT: BTCT Manjalumoodu and Padanthalumoodu Foranes |
| 9 | Tue | 09.30am | CAT: BTCT Manjalumoodu and Padanthalumoodu Foranes |
| 10 | Wed | 09.30 am<br>10.00 am | CAT: BTCT Manjalumoodu and Padanthalumoodu Foranes<br>CRS meeting at Kalluvilai |
| 11 | Thu | 09.30 am | Priests' Conferance |
| 12 | Fri | 09.30 am | CAT: BTCT Manjalumoodu and Padanthalumoodu Foranes |
| 13 | Sat | 09.30 am<br>10.00 am | CAT: BTCT Manjalumoodu and Padanthalumoodu Foranes<br>Meeting of Forane Vicars and Catechism directors at Bishop's House |

| | | | |
|---|---|---|---|
| 14 | Sun | 09.30 am<br>01.30 pm<br><br><br><br>02.00 pm<br><br>02.30 pm | CAT: BTCT Thuckalay-Plankalai Forane<br>FA: Mothers' Day and Annual Day at kalluvilai<br>CAT: VPV Ends<br>KKSSS: Family Day Celebration at Mukkootukal<br>KKSSS: Spark – Educare Camp<br>SMYM: Annual Retreat Preparation Thuckalay- Plankalai Forane<br>Uraviam: Forane Level New Prayer Book Training at Manjalumoodu and Kaliyal |
| 15 | Mon | 09.30 am | CAT: BTCT Soosaipuram and Nithravilai Foranes |
| 16 | Tue | 09.30 am | CAT: BTCT Soosaipuram and Nithravilai Foranes<br>Vocation Camp at St. Mary's Minor Seminary Mukkootukal<br>Arukani: Forane Level Choir practice |
| 17 | Wed | 09.30 am | CAT: BTCT Nithravilai Forane<br>Vocation Camp at St. Mary's Minor Seminary Mukootukal<br>Kaliyal: Forane Level Choir practice |
| 18 | Thu | 09.30 am<br><br>02.30 pm | CAT: BTCT Soosaipuram and Nithravilai Foranes<br>Vocation Camp at St. Mary's Minor Seminary Mukootukal<br>Padanthalumoodu: Forane Level Choir practice<br>Kambam: Health Awareness Program |
| 19 | Fri | 09.30 am | CAT: BTCT Soosaipuram and Nithravilai Foranes<br>Vocation Camp II at St. Mary's Minor Seminary Mukootukal<br>Kambam: Health Awareness Program |
| 20 | Sat | 09.30 am<br>10.00 am<br>09.30 am | CAT: BTCT Soosaipuram Forane<br>FA: Marriage preparation Course<br>Pastoral Council Meeting at Sangamam<br>Kambam: Health Awareness Program |

| | | | |
|---|---|---|---|
| 21 | Sun | 09.30 am<br>10.00 am<br>02.00 pm<br>02.30 pm | CAT: BTCT Thuckalay-Plankalai Forane<br>FA: Marriage preparation Course<br>SMYM: Annual Retreat Preparation Padanthalumoodu Forane<br>Soosaipuram: Forane Level Choir practice<br>Kambam: Health Awareness Program |
| 22 | Mon | 02.30 pm | Thuckalay-Plankalai: Forane Level Choir practice |
| 23 | Tue | 02.30 pm | Manjalumoodu: Forane Level Choir practice |
| 25 | Thu | 02.00 pm | Seminar for School Correspondents and Principals at Sangamam |
| 26 | Fri | 10.00 am | CAT: Retreat for Teachers |
| 27 | Sat | 10.00 am<br>02.30 pm | CAT: Retreat for Teachers<br>Choir Training at Forane Level<br>KKSSS: Spark – Educare Camp |
| 28 | Sun | 09.30 am<br>02.00 pm<br>09.30 am | CAT: BTCT Thuckalay-Plankalai Forane<br>CAT: Inauguration of New Academic Year 2023-2024 Parish Level<br>SMYM: Annual Retreat Preparation Nithravilai Forane<br>Sangamam: Animation of Kaikars and Accountants |
| 29 | Mon | 10.00 am<br>02.30 pm | Recollection for Tamil and English Medium Staffs at Kalluvilai Nithravilai: Forane Level Choir practice |
| 30 | Tue | 02.30 pm | Tenkasi: Forane Level Choir practice |

**Fr.Thomas Powathuparampil, Protosyncellus**

# BISHOP’S ENGAGEMENTS - MAY 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Mon | 10. 00 am | Kumili: Marrriage Holy Qurbana |
| 2 | Tue | 03.00 pm | Bishop’s House: Meeting the Priests.<br>Visiting VPV classes in the parishes |
| 3 | Wed | 09.30 am<br>06.00 pm | Curia Meeting<br>Kalluketti: Feast Day Holy Qurbana |
| 4 | Thu | 10.00 am<br>04.00 pm | Visiting CAT: BTCT class Kaliyal Forane<br>Padanthalumoodu: Archbishop Mar Joseph Powathil Remembrance Holy Qurbana |
| 5 | Fri | 09.30 am<br>05.30 pm | Bishop’s House: Meeting the fathers<br>Soosaipuram: Feast Day Holy Qurbana |
| 6 | Sat | 09.30 am | Kaliyal: CMC Vestition and First Profession |
| 7 | Sun | | Edathuva: Feast Day Holy Qurbana |
| 8 | Mon | 10.30 am | Kunnanthanam: LSDP Vestition and First Profession |
| 9 | Tue | 09.30 am<br>03.00 pm | Soosaipuram: Alphonsa College Annual Day<br>Meeting with Major Seminarians (Philosophy) |
| 10 | Wed | 10.00 am<br>03.00 pm | Kalluvilai: CRS Meeting<br>Bishop’s House: Meeting with CMI Trivandrum Provincial |
| 11 | Thu | 09.30 am | Sangamam: Priests’ Conference |
| 12 | Fri | 10.00 am | Visiting: CAT: BTCT Manjalumoodu and Padanthalumoodu Foranes<br>Visiting VPV classes in the Parishes |
| 13 | Sat | 10.00 pm<br>06.00 pm | Bishop’s House: Meeting of Forane Vicars and Catechism directors<br>Varuthattu: First Holy Communion Holy Qurbana |

| | | | |
|---|---|---|---|
| 14 | Sun | 10.30 am | Mekkarai: Feast Day Holy Qurbana |
| 15 | Mon | 10.00 am | Visiting CAT: BTCT Soosaipuram and Nithravilai Foranes |
| 17 | Wed | 02.00 pm | Bishop's House: Visit of the Benefactor |
| 18 | Thu | 06.30 am | Mukootukal: Holy Qurbana at Vocation Camp |
| 20 | Sat | 09.30 am | Sangamam: Pastoral Council >> Chennai |
| 21 | Sun | | Chennai: Migrants Meet >> Thuckalay |
| 22 | Mon | 06.30 am<br>10.00 am<br>06.00 pm | Kavalkinaru: First Holy Communion Holy Qurbana<br>Manjalumoodi: Marriage Holy Qurbana<br>Karodu: DNN Farewell Holy Qurbana |
| 23 | Tue | 06.30 am<br>12.00 pm | Azhagiamandapam: FCC Final Profession Holy Qurbana<br>Manjalumoodu: Class 8 Vocation camp |
| 24 | Wed | 10.00 am | Vailankarai: Marriage Holy Qurbana<br>Bishop's House: Felicitating the newly and final professed Religious |
| 25 | Thu | 10.00 am<br>02.00 pm | Melpalai: Marriage Holy Qurbana<br>Sangamam: workshop for School Correspondents and Principals |
| 26 | Fri | 09.30 am | Catechism Teachers' Retreat |
| 27 | Sat | 09.30 am | Catechism Teachers' Retreat |
| 28 | Sun | 09.30 am | Sangamam: Animation of Kaikars and Accountants |
| 29 | Mon | 09.00 am<br>10.00 am | Nithravilai: Marriage Holy Qurbana<br>Kalluvilai: Recollection for Tamil and English medium Staff |
| 30 | Tue | 03.30 pm | Changanassery: SABS Holy Qurbana |
| 31 | Thu | 05.00 pm | Manjalumoodu: Holy Qurbana and Marian Month Novena Conclusion |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**



KKSSS, WOMEN'S DAY CELEBRATIONS,
16-26.03.2023 WITH VARIOUS SHGs



PRIESTS AND RELIGIOUS RECOLLECTION,
KALLUVILAI, 05.04.2023



EASTER VIGIL, KAISALAVILAI, 09.04.2023



NAMPIKKAI AALAYAM, SILVER JUBILEE, KAZHUVANTHITTAI, 14.04.2023



DIOCESAN HEALTH COMMISSION, HEART AWARENESS MARATHON, CONCLUSION, SOOSAIPURAM, 14.04.2023

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,

Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175

Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570